சுருக்கம்

வேலைவாய்ப்பு அலுவலக நடைமுறைகள் – 2011 முதல் 2015 வரையிலான ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை

அரசாணை (டி) எண்.500

நாள் 22.8.2017

ஹேவிளம்பி, ஆவணி – 6,

திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கவும்:-

1) அரசாணை (டி) எண்.584, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை, நாள் 8.12.2014.
2) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடித எண்.பப1/16248/2017, நாள் 20.7.2017 மற்றும் நாள் 10.8.2017.

----

ஆணை:

13.7.2017 அன்று தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கை 32–ன் மீது விவாதம் நடைபெறும்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 2017–2018–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் வரிசை எண். 5–ல், “2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை பல்வேறு காரணங்களினால் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை” என்ற பொருளில் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார் :-

> “2011 முதல் 2015 வரையிலான ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் தங்களின் பதிவு மூப்பினை மீளப் பெறவும் அதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெற்றிட உதவிடும் வகையிலும் 2017 – 2018 ஆம் ஆண்டில் சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும் இந்த சலுகையினால் சுமார் 2 இலட்சம் பதிவுதாரர்கள் பயன் பெறுவார்கள்”

2. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், மேலே பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்க ஒரு கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. மேற்கண்ட அறிவிப்பு தொடர்பான கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 01.01.2011 முதல் 31.12.2015 வரை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை

புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகையை வழங்கலாம் எனவும், இச்சலுகையைப் பெற விரும்பும் நபர்கள், அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆன்லைன் மூலமாகவோ மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவோ தங்கள் பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம் என்று ஆணையிடுகிறது.

4. மேலே கண்ட இவ்வாணை பற்றிய விவரங்களை இரண்டு முன்னிலை தமிழ் நாளிதழ்களில் வெளியிடுவதுடன், அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் உள்ள தகவல் பலகையில் (Notice Board in Employment Exchanges) பொது மக்களின் தகவலுக்காக வைக்க வேண்டும் என அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதிநிர்மலாசாமி,
அரசு கூடுதல் செயலாளர்/
செயலாளருக்காக

பெறுநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், கிண்டி, சென்னை–600 032.
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை – 9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து துறை முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
செயலாளரின் தனிச்செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–II) துறை, சென்னை–9.
கணினிப் பிரிவு பொறுப்பாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை– 9.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.
சுத்த நகல் (கோப்பு எண்.14376/ட்டி2/2017)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

மா.பரிமளா
22/8/2017

பிரிவு அலுவலர்